# தலையாட்டி போல் ...

*( 11 ம் பக்கத் தொடர்ச்சி)*

கொஞ்சத் தகவல்கள், கொஞ்சப் புனைவு, கொஞ்சம் வம்பளப்பு (gossip)என்பதாக அவரது கட்டுரைகள் அமைந்திருக்கும்.

தான் எழுதும் தவறான தகவல்களால், சம்பந்தப்பட்டவர்களின் அப்பாவி உறவினர்கள் பாதிக்கப்படக் கூடும் என்கிற தார்மீக அக்கறை எதுவும் ஜெயராஜுக்கு கிடையாது. இவ்விடயத்தில், பயத்தால் அல்லது பணத்திற்காக சிறிலங்காப் படைகளுடன் இணைந்து செயற்படும் முகமூடியணிந்த தலையாட்டிகளுடன் ஜெயராஜை சேர்த்துப் பார்க்க முடியும்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்காக, அவர் இப்போது எழுதியிருக்கும் ஒரு கட்டுரை விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. செல்வராசா பத்மநாதனுக்கு, அமைப்பின் வெளிநாட்டு ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்புப் பற்றியது. ‘LTTE Cabal opposes “KP” as leader of re-structured Tigers’ என்ற தலைப்பில் அவர் எழுதியிருக்கும் இக்கட்டுரையில், அவர் வாழ்நாளிலே சந்தித்திருக்காத, குறைந்த பட்சம் தொடர்புகளையாவது கொண்டிருக்காத பலருடைய விபரங்களை வெளியிட்டு, அவர்கள் எல்லாம் திரு. பத்மநாதனுக்கு எதிராகச் செயற்படுவதாக விபரித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் செயற்பட்டாளர்கள், ஆதரவாளர்கள் மத்தியில், திரு பத்மநாதனின் தெரிவு தொடர்பில் அதிருப்தியிருந்தது இரகசியமான விடயமல்ல. அதுபோல் அவ்வாறு எதிர்ப்பு ஏற்படும் சாத்தியப்பாடு என்பதும் ஊகிக்க முடியாத ஒரு விடயமுமல்ல. திரு. பத்மநாதன் வெளியிட்ட ஒன்றுக்கொன்று முரண்பட்ட அறிக்கைகள், அவரது நிலைப்பாட்டில் உறுதிப்பாடின்மையை காட்டியது. அவரை நேரடியாகத் தொடர்பு கொள்வதிலுள்ள சிக்கல்கள், பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியது. அவரது இந்திய சார்பு நிலையும் பல்வேறு ஊகங்களுக்கு வழி சமைத்தது.

ஆனால் இந்த அடிப்படைகள் மறைக்கப்பட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அதிகாரப் போட்டி ஏற்பட்டுள்ளதாக நிறுவுவதும், அதன் மூலம் தமிழ் மக்களை, விடுதலைப் புலிகள் அமைப்பின்மீது வெறுப்படையச் செய்வதுமே ஜெயராஜுக்கு ஊதியம் கொடுப்பவர்களது (Pay Masters) எதிர்பார்ப்பாக உள்ளது.

**விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அதிகாரப்போட்டி ஏற்பட்டுள்ளதாக நிறுவுவதும், அதன் மூலம் தமிழ் மக்களை, விடுதலைப் புலிகள் அமைப்பின்மீது வெறுப்படையச் செய்வதுமே ஜெயராஜுக்கு ஊதியம் கொடுப்பவர்களது எதிர்பார்ப்பாக உள்ளது.**

விடுதலைப் புலிகளின் தாயகக் கட்டமைப்புகள் முற்றாகச் சிதைக்கப்பட்டு, உயர் மட்டத் தளபதிகள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். பல போராளிகள் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில், வெளிநாடுகளிலுள்ள விடுதலைப்புலி ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள், மற்றும் பொது மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்படுவது இயற்கையே.

தமிழின எதிரிகளோ, ஒரு குத்து-வெட்டு நிலை ஏற்பட்டு சில தலைகளாவது உருளும் என எதிர்பார்த்தார்கள். ஆனால் சிறிலங்கா, இந்திய உளவு அமைப்புகள் எதிர்பார்த்தது போல் இல்லாமல், நிலைமை மிகவும் அவதானத்துடன் கையாளப்பட்டு வருகிறது.

புறநடையாக சில சம்பவங்கள் நிகழ்ந்ததும், ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கைகள், கட்டுரைகள் வெளியிடப்பட்டமையையும் மறைப்பதற்கில்லை. ஆனால் தமிழ்த் தேசியவாதிகள் மத்தியில் காணப்படும் அசாத்தியமான பொறுமை, சகிப்புத்தன்மை என்பவற்றால், பிளவுகள் அதிகரிக்காமல், கட்டமைப்புகள் தக்க வைக்கப்பட்டுள்ளன. இது மேற்கண்ட சக்திகளிற்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவே இந்தக் கட்டுரை.

மேற்படி கட்டுரையினைத் தமிழில் மொழிபெயர்த்து, ‘கே.பி. வருவதை எதிர்க்கும் சதிக்கூட்டம்’ என்ற தலைப்பில் யாழ் உதயன் பத்திரிகையில் பிரசுரித்திருகிறார் அதன் பிரதம ஆசிரியர் வித்தியாதரன். அவர் வெளிச்சக்திகளின் அழுத்தம் காரணமாக அக்கட்டுரையை பிரசுரித்தாரா அல்லது அவரும் இந்தச் சக்திகளுக்கு விலைபோய் விட்டாரா என்பதனையிட்டு அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

ஜெயராஜின் கட்டுரையில் திரு. பத்மநாதனுக்கு எதிராக செயற்படுவர்கள் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்களில் சிலர், வித்தியாதரனுடன் நித்திய தொடர்பில் உள்ளவர்கள், அதிலும் ஒருவர் அவரது நெருங்கிய உறவினர், இவர்கள் யாருடனும் அவர்களது நிலைப்பாடு தொடர்பில், ஜெயராஜின் குற்றச்சாட்டுக்கள் நியாயமானதா என வித்தியாதரன் சரிபார்த்துக் கொள்ளவில்லை. வழமைக்கு மாறான அவரது இந்நடவடிக்கை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயராஜ் வரிசையில், வித்தியாதரனும் சேர்ந்து கொண்டிருந்தால், ‘போர்க்களத்தில் பேனாவுடன் சமராடும் ஒரு ஊடகவியலாளர்’ என்ற வகையில் அவருக்கு மக்கள் மத்தியிலிருந்த மரியாதை சிதறடிக்கப்பட்டுவிடும்.

## வசைபாடும் கவிக்குயில்கள்....

பல்லாயிரம் ஆண்டுகளாம் புகழ்பூத்த
முற்குடியாம்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின்
நற்குடியாம்
தொல்தோன்றி மண்கண்டு மன்கண்டும்
பயனில்லை
சொல்கொண்டு இணைவர்தம் சிரமெடுப்பர்
காலமிதில்

ஒருவிரல் வெளிச்சுட்டி மூவிரல் தனைச்சுட்டி
தரையினிலே உடல்பரப்பி உமிழ்கிறார்
சிரம்நிமிர்த்தி
வருவதுவும் பெயரல்ல தருவதுவும் புகழல்ல
திரும்புவது உமிழதுவே மூவிரலும்
குறிப்பதுவே

களமதனில் உரையாடல் கனிகின்றார்
தினம்தானும்
தளம்மாறித் தடம்மாறிப் புனைவாரே
வசையாடல்
களவுதட்டில் ஒருபேச்சு கருத்தியலில்
மறுபோக்கு
உளமுரையார் சொல்லதுவும் அம்பலம்தான்
ஏறிடுமோ

எண்ணத்தில் வந்தவுடன் கிண்ணத்தில்
தந்துவிட்டார்
உண்மைநிலை உணர்வின்றி வசைபாடிச்
சென்றுவிட்டார்
திண்ணையதன் உரைகொண்டு மறுபக்கம்
அறிவீரோ
கண்கொண்ட மாயையினால் களம்மாறிக்
கொல்வீரோ

நீயென்ன செய்தாய் எனக்கேட்கும்
கணமதுவும்

தாயென்ன செய்தாள் கருக்கொள்ள
என்பதுவும்

பேயனைய மாந்தர்தம் வினவிவரும்
மொழியலவோ

தீயனைய கீழ்ச்சொல் தனைத்தாழ்த்தும்
அறிந்திலையோ

*- டங்குவார்*


# Job Vacancy !

## தமிழ்மொழி ஆசிரியர்களிற்கான வெற்றிடங்கள்

சறே தமிழ் கல்விக்கூடம், தமிழ்மொழி, நன்னெறி மற்றும் தென்கிழக்காசிய நுண்கலைப் பாடங்களை கற்பிக்கவென நியூ மோல்டனில் யூன் 2009 இல் அமைக்கப்பட்டது. இப் பாடசாலை ஒவ்வொரு சனிக்கிழமையும் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை நடைபெற்று வருகிறது. மாணவர் எண்ணிக்கையின் துரித அதிகரிப்பு காரணமாக, சறே தமிழ் கல்விக்கூட நிர்வாகக்குழு, சகல நிலைகளிற்கும் தமிழ்மொழி மற்றும் நன்னெறி ஆசிரியர்களிற்கான (தன்னார்வ மற்றும் சம்பளத்துடன் கூடிய) விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பதாரர்களில் பின்வரும் தகுதிகள் எதிர்பார்க்கப்படுகின்றன:

- **தமிழ்மொழியில் ஏற்புடைய தகுதிச்சான்றிதழ்; அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ்மொழிப் பட்டதாரிகளிற்கு முன்னுரிமை வழங்கப்படும்;**
- **தமிழ்மொழி கற்பித்தலில் குறைந்தது ஒரு வருட அனுபவம்; ஐக்கிய இராச்சிய தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பாடத்திட்டத்தில் பரீட்சியம்;**
- **ஆங்கில மொழியில் சிறந்த அறிவு;**
- **சமூக மொழி கலை கலாச்சார வளர்ச்சிக்கு உதவும் மனப்பான்மை.**

மேலும், இப்பாடசாலை ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, தலைமை தாங்கி, நெறிப்படுத்தி, பாடசாலை நிர்வாகக்குழுவின் ஆதரவுடன்,

**சறே தமிழ் கல்விக்கூடம்**
**Surrey Tamil School**
Based At: Coombe Boys' School, College Gardens
Blake's Lane, New Malden, Surrey KT3 6NU
web: www.surreytamilschool.com email: admin@surreytamilschool.org.uk
Est.2008

பாடசாலைக் கல்வித்தரத்தை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல, பாடசாலை நிர்வாகக்குழு தகுந்த தலைமை ஆசிரியருக்கான விண்ணப்பங்களையும் கோருகின்றது. தலைமை ஆசிரியருக்கான விண்ணப்பதாரர்களில் பின்வரும் தகுதிகள் மேலதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றன:

- **அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ்மொழிப் பட்டதாரி;**
- **தமிழ்மொழி கற்பித்தலில் குறைந்தது மூன்று வருட அனுபவம்;**
- **தகுந்த நிர்வாகத் திறமையும் அனுபவமும்;**
- **கணனிப் பாவனையில் பரீட்சியம்.**

இந்தப் பதவிகளில் உங்களுக்கு நாட்டமிருந்தால், உங்கள் சமீப காலத்தய அனுபவமுதிர்ச்சிப் பத்திரப் (CV) பிரதியை, 25 ஆகஸ்ட் 2008 இல் அல்லது அதற்கு முன்பாக தயவுசெய்து கீழே தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். CRB Check இல் ஏற்புடைய நிலையைப் பெறுபவர்களிற்கே பதவிகள் வழங்கப்படும்.

**தபால் மூலம்**
Education Secretary
Surrey Tamil School
16 Ruston Avenue
Surbiton
Surrey KT5 9HW

**மின்னஞ்சல் மூலம்**
sts.education2009@googlemail.com

**மேலதிக விபரங்களுக்கு**
**07973124120**
**07515276644**